THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No.816/2022** | **PW.3** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திரு. சுதர்சன் | |
| Husband/Father | : திரு. சண்முகவேல் | |
| Village | : பணகுடி | |
| Taluk | : ராதாபுரம் | |
| Employment | : சிறப்பு உதவி ஆய்வாளர் | |
| Age | : 53 | Date: 07.07.2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(All Accused present. )**

**<u>முதல் விசாரணை</u> :–**

1. நான் தற்போது பணகுடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் நீதிமன்ற அனுமதி பெற்று ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.10.2021 அன்று தேதி 17.00 மணிக்கு இரண்டாம் நிலை காவலர் திரு.கிங்ஸ் என்பவர் நிலைய பொறுப்பில் இருக்கும்போது வள்ளியூர் பிரேம் மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவல் படி மேற்படி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வாதி ராபின் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.461/2021 இ.த.ச பிரிவுகள் 147, 294 பி,323, 506(2) படி வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர் புகார் வாக்குமூலத்தையும், முதல்

தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் வள்ளியூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை உதவி ஆய்வாளர் திரு.மகேந்திரம் அவரது பார்வைக்கு வைத்துள்ளார்.

2. இவ்வழக்கினை அவர் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜன், முத்துசெல்வன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 மற்றும் 9 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் வழக்கின் 3 எதிரிகளை குறைவு செய்து சட்டப்பிரிவை மாற்றம் செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். வழக்கின் எதிரிகள் முன்பிணைபெற்று பிணையில் சென்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. பின்னர் வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

3. சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் அவரது புலன் விசாரணையில் இருந்தும் எதிரிகள் மீது குற்றம் உண்மை என தெரியவந்ததால் இ.த.ச பிரிவு 294(பி), 323, 324, 506(2) பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(வாதி கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3, பார்வை மகசர் அ.சா.ஆ.4, மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.5, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.6, காயச்சான்று அ.சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

4. இவ்வழக்கில் கூறியுள்ள நாள் மற்றும் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றும் பார்வை மகசர், வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>**

இல்லை.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.07.07 15:22:06 +0530

Judicial Magistrate,
Valliyoor.